பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை (20.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 113

அமைதி நடவடிக்கைகளில் பிரிட்டன்

கூடுதல் பங்களிப்பை வழங்கமுடியும்

சமாதானச் செயலகப் பணிப்பாளர் கொஹன்ன இந்தியாவில் தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச் 20

இலங்கை அமைதி முயற்சிகளில் பிரிட்டன் பிரதான பாத்திரத்தை வகிக்க முடியும். கூடு தல் பங்களிப்பை வழங்க முடியும். - இவ்வாறு இந்தியாவில் வைத்துக்கருத்து வெளியிட்டிருக்கின்றார் இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளரும். வெளியுறவு அமைச்சின் செயலாளருமான பாலித கொஹன்ன.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகமவும், வெளியுறவுச் செயலாளர் பாலித கொஹன்னவும் தமது பிரிட்டன் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது புதுடில்லி சென்றுள்ளனர். இன்று மாலை அங்கிருந்து அவர்கள் கொழும்புக்குப் புறப்படுகின்றார்கள்.

புதுடில்லியில் தங்கியிருந்தவேளை செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியிலேயே கொஹன்ன மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார். அங்கு வைத்து அவர் மேலும் கூறியவையாவது:-

இலங்கை அமைதி முயற்சிகளில் பிரிட்டன் முக்கிய பங்காற்ற முடியும். பிரதான பாத்திரத்தை வகிக்க முடியும்.

என்றாலும், நோர்வேயின் அனுசரணைப் பொறுப்பின் இடத்தை பிரிட்டன் ஏற்க வேண்டியதில்லை.

அமைதிப் பேச்சு மேசைக்கு இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் திரும்பும் போது தொடர்ந்து அதில் நோர்வே பங்களிக்க வேண்டியிருக்கும்.

இலங்கை விடயத்தைப் பொறுத்தவரை பிரிட்டன் அதனுடன் நீண்டகால வரலாற்றுத் தொடர்புகளைக் கொண்டது. அதனால் இலங்கை விடயத்தில் அதற்கு அதிக பரிச்

(03 ஆம் பக்கம் பார்க்க)

சூரியாராய்ச்சி இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார்

கொழும்பு , மார்ச் 20

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராய்ச்சி இன்று கடுவெல நீதிமன்றில் ஆஜர்செய்யப்படுவார்.

தபால் அமைச்சுக்குச் சொந்தமான வாகனம் ஒன்றை சிறிபதி தனது சொந்தத் தேவைக்காக முறைகேடான முறையில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு விளக்கம் அளிக்குமாறு கடுவெல நீதிவான் அவருக்கு உத்தரவிட்டிருந்தார்.

அந்த உத்தரவுக்கு அமைய கடந்த சனிக்கிழமை காலை ஒன்பதுமணிக்கு குற்றப் புலனாய்வு அலுவலகத்திற்கு விளக்கம்

(03 ஆம் பக்கம் பார்க்க)

சுண்டிக்குளம் பாடசாலை மீது விமானக் குண்டுத் தாக்குதல்!

175 மாணவர்கள் அருந்தப்பு! மூவர் காயம்!!

கிளிநொச்சி, மார்ச் 20

கிளிநொச்சிக்கு வடகிழக்கே சுண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் மீது இலங்கை விமானப்படை விமானங்கள் நேற்றுக்காலை குண்டுத்தாக்குதலை நடத்தின என்று அங்கிருந்து வெளியான தகவல்கள் தெரிவித்தன. இத்தாக்குதலில் பாடசாலைச் சிறுவர்கள் இருவரும் ஆசிரியை ஒருவரும் படுகாயமடைந்தனர். இவர்கள் மூவரும் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

நேற்றுக்காலை மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்த சிறிது நேரத்தில் - காலை 9.45 மணியளவில் - 'கிபிர்' ஜெற் விமானங்கள் பாடசாலை மீது குண்டுகளை வீசித் தாக்கின என்று தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு பிரிவினுள் அடங்கும் சுண்டிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள சுண்டிக்குளம் வித்தியாலயம் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஏழாம் தர மாணவனான கே. நிரோஜன், ஒன்பதாம் தர மாணவனான கே. ஜெகதீபன் ஆகியோரும் ஆசிரியையான கே. சத்தியவதி என்பவருமே காயமடைந்தனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

வகுப்பறைக்கட்டடம் ஒன்றின் அருகே -25 மீற்றர் தொலைவில் - ஒரு குண்டு வீழ்ந்து வெடித்துள்ளது. மற்றொரு குண்டு பாடசாலை அருகே நின்ற பெரும் மரத்தில் மோதுண்டு ஆகாயத்திலேயே வெடித்துச் சிதறியது.

தாக்குதல் நடந்த சமயம் குறைந்

[03 ஆம் பக்கம் பார்க்க]

யாழ். பல்கலைக்கழகத்தில் கிழக்கு அகதிகளுக்கு நிதியம்

யாழ்ப்பாணம், மார்ச், 20

கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களின் துயர் துடைக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் 'துயர் துடைப்பு நிதியம்' ஒன்று நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக கிழக்கு மாகாண மக்கள் அங்கு இடம்பெறும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில், இம்மக்களின் துயரத்தைத் துடைக்கும் முகமாக இந்த துயர்துடைப்பு நிதியத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆரம்பித்து வைத்துள்ளதாக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இந்த நிதியத்திற்கு பல்கலைக்கழக சமூகம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதுடன் ஏனையவர்களும் இந்த நிதியத்திற்கு உதவ முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நேற்றுக்காலை மாணவர் ஒன்றியப் பிரதிநிதி தலைமையில் கூடிய மாணவர்கள், கிழக்கு மாகாண மக்களின் அவல நிலைக்காக அனுதாபம் தெரிவிக்கும் கூட்டம் ஒன்றையும் நடத்தினர். (அ-68)

பருத்தித்துறை, கொடிகாமம் வீதியில்

*முள்ளிப்பாலத்தடியில் எரிந்த நிலையில் இரு இளைஞர்களின் சடலங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்20

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் முள்ளிப் பாலத்துக்கு சமீபமாக கண்டல்காட்டுப் பகுதியில் எரியுண்ட நிலையில் இரு இளைஞர்களின் சடலங்கள் காணப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தப் பகுதிக்கு விறகு வெட்டுவதற்குச் சென்றவர்கள் இச்சடலங்களைக் கண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரயர்போட்டு எரிக்கப்பட்ட நிலையில் இச்சடலங்கள் காணப்பட்டன என்றும் மிகவும் உருக்குலைந்த நிலையில் சடலங்கள் இருந்தன என்றும் அவற்றைக் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இச்சடலங்கள் குறித்து கொடிகாமம் பொலிஸாருக்கோ, சாவகச்சேரி நீதிமன்றத்துக்கோ நேற்றுமாலை வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது. (அ-1)

வெல்லாவெளியில் மோதல்கள்; இருதரப்புகளிலும் இழப்புகள்

கொழும்பு, மார்ச் 20

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் - வெல்லாவெளியில் - விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படையினருக்கும் இடையே நேற்றும் நேற்றுமுன்தினமும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டு தரப்புகளிலும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

வெல்லவெளியில் கால்நடையாக ரோந்துசென்ற கொமாண்டோ படையினர் அங்கு விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நால்வரை சுட்டுக்கொன்றனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். அதே பகுதியில் இடம்பெற்ற பிறிதொரு தாக்குதல் சம்பவத்தில் அரசுப் படைச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டு, 12 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் அவர் நேற்றுத் தகவல் வெளியிட்டார்.

ஞாயிறன்று இந்தப் பகுதியில் (04ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கு நிலைமை; சபையில் இன்று விவாதம்

கொழும்பு, மார்ச், 20

வடக்கு - கிழக்கின் இன்றைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் நடை பெறும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த விவாதத்துக்கு முன்னறிவித்தல் கொடுத் திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

*நாவலர் வீதியில் நேற்றிரவு வேட்டுச் சத்தங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். நாவலர் வீதியில், கஸ்தூரியார் வீதிச் சந்திக்குச் சமீபமாக நேற்று இரவு 7.55 மணியளவில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. பின்னர் இரவு 8.35 மணியளவில் சற்றுத் தொலைவில் கிரனேட் வெடித்த சத்தம் கேட்டது.

சேதவிவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (அ-1)

யாழ். பல்கலைக்குத் தெரிவான மாணவர் பதிவுகள் நாளை ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், மார்ச்20

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 2006 - 2007 கல்வியாண்டுக்கு தெரிவாகியுள்ள புதிய மாணவர்களுக்கான பதிவுகள் நாளை ஆரம்பமாகின்றது.

விஞ்ஞானம் (பௌதீகம்), விஞ்ஞானம் (உயிரியல்), விஞ்ஞானம் (கணனி) ஆகிய கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் நாளை புதன்கிழமையும் -

சித்த மருத்துவத்துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் -

மருத்துவத்துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் -

விவசாயத்துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமையும், முகாமைத்துவத்துறைக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 27ஆம் திகதியும் வர்த்தகத்துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதியும் தமது பதிவுகளைச் செய்யவேண்டும் என்று பதிவாளர் அறி

(04ஆம் பக்கம் பார்க்க)

அல்லைப்பிட்டிப் படுகொலை வழக்கை தொடர்ந்து முன்னெடுப்பதில் இக்கட்டு

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்பு இல்லையாம்

கொழும்பு, மார்ச் 20

யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டியில் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரின் படுகொலை தொடர்பான வழக்கில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்றும், இதனால் அந்த வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட சட்ட வட்டாரங்களில் விசனம் தெரிவிக்கப்பட்டிருகிறது.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் நடந்துவரும் இந்த வழக்கு வெறுமனே ஒத்திவைக்கப்பட்ட வண்ணம் உள்ளன. கடந்த புதன்கிழமை இந்த வழக்கு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மீண்

(04ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

ஓம்
குகமயம்

தவத்திரு. வே.முருகேசு சுவாமிகள்
அவர்களின்
பத்தாம் ஆண்டு குருபூசை

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் : 26.03.2007 திங்கட்கிழமை

மேற்படி குருபூசை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும். விசேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் அறுபத்துமூவர் குரு பூசையுடன் நிறைவு பெறும்.

* முருகேசு சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வருடாந்த கும்பாபிஷேகம்21.03.2007 புதன்கிழமை காலை செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. எம்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று முருகன் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளது.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அனைவரும் மேற்குறிப்பிட்ட தினங்களில் வருகைதந்து சந்நிதி வேலவனது திருவருளையும் குருவருளையும் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

தவத்திரு வே. முருகேசு
சுவாமிகளின் அடியார்கள் சார்பில்
ஆ.அருணாசலம்

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(சி/50818)

---

31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்
01
★
12
★
1928

விண்ணில்
18
★
02
★
2007

திருமதி நாகம்மா சுப்பையா (குஞ்சு ரீச்சர்)
(இளைப்பாறிய ஆசிரியை)

அன்பு மழை பொழிந்து அவனியில்
எம்மையெல்லாம் பாசத்தின் சுமையோடு
அரவணைத்துக் காத்த எமது அன்புத் தெய்வமே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
31 நாள்கள் ஆகியும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சினில் என்றென்றும் அழியா ஓவியமாய்
நீங்கா நினைவலைகளாய் என்றும் தொடரும்...

'திருவருள் இல்லம்', பிள்ளையார் வீதி,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

(58900)

- குடும்பத்தினர்.

90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
27
*
01
*
1973

மறைவு
20
*
12
*
2006

அமரர்
சிவக்கொழுந்து சிவதாஸ் (பாபு)

20.12.2006 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (20.03.2007) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு பிரார்த்திப்பதுடன், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(58879)

- குடும்பத்தினர்.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
02
★
06
★
1953

விண்ணில்
10
★
04
★
2005

கைதடி கிழக்கு
அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா
(நகரசபை உத்தியோகத்தர் - சாவகச்சேரி)
(திதி - பூர்வபக்க துதியை - 20-03-2007)

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்,
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
அன்பு, பண்பு, பாசத்தின் பிறப்பிடமே
வாரி வழங்கும் வள்ளலே, எம் தலைவா !
அன்புத் தெய்வமே ! எங்கள் உயிர் உள்ளவரை
எம்முடனே என்றும் வாழ்வீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

'சந்நிதி இல்லம்,'
கைதடி கிழக்கு, கைதடி.

(58903)

பசுமையான நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

தவறிவிட்டது

32, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நல்லநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (532974763V), மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் என்பன சட்டநாதர் கோயிலுக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே. 222 8231

வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள 4 படுக்கை அறைகள், 2 Visiting Halls, குளியலறைகளுடன் கூடிய வீடு அரச உத்தியோகக் குடும்பத்தினருக்கு உடன் வாடகைக்கு விடப்படும்.

Note - அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பே. இல. 0212222099

(58319)

16ஆம் வருட நினைவஞ்சலி

அமரர்
சிவபுரநாதர் சிவராசா(சிவன்)
(பாதுகாப்பு ஊழியர், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்)

அன்னை மடியில்
04.08.1966

ஆண்டவன் பிடியில்
17-03-1991

திதி : 20.03.2007

இருபத்தைந்து வருடத்தில்
இறைவனடி சேர்ந்தீரே
பதினாறு வருடமென்ன
பாரில் நாமுள்ளவரை மாறாது உன் நினைவு
ஓம் சாந்தி

(58789)

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அக்கா, மருமகன்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

மரண அறிவித்தல்

Rtn.சின்னத்துரை கனகரத்தினம்
(J.P.U.M, அரச சட்டத்தரணி, சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, தலைவர் திவ்வியஜீவன சங்கம், யாழ்ப்பாணம், முன்னாள் தலைவர்- வடபிராந்திய போக்குவரத்துச் சபை)

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை கனகரத்தினம் 16.03.2007 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செ.சின்னத்துரை - கெலிசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - முத்தம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசதுரையின்(முன்னாள் கஷ்ட நிவாரண அதிகாரி, கொழும்பு மாநகர சபை) அன்புச் சகோதரரும் Dr.க.ஜெகதீசன் (U.S.A.), க.கேசவன் (J.P.U.M. சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்), திருமதி சி.நிர்மலா, திருமதி வி.விமலா, Dr.க. சிவனேசன் (மருத்துவபீடம், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி Dr.ஜெ.காந்திமதி(U.S.A.), திருமதி கே.சிவமலர், திருமதி சி.ஜெயகௌரி காலஞ்சென்றவர்களான க.சிவபாதசுந்தரம், Dr.ந. விஜேந்திரன் (J.P.), ஆகியோரின் மாமனாரும் மீரா,Dr.மிதிலா, மைத்திரேயி, Dr.கே. மயூரதன், சஜீவன் (மருத்துவ மாணவன்), மேனகா(சட்டக் கல்லூரி மாணவி), துளசிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),நகுலன் (கனடா), துஷ்யந்தன் (கனடா), ஜனகன்(மருத்துவ மாணவன்), ஜயந்தன் (யாழ். நீதிமன்றம்) கௌரி, ஜனனி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) சிவராம்(யாழ்.பரியோவான் கல்லூரி) திருமதி கஜால், ஜெவ் (U.S.A.), ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2007) புதன்கிழமை காலை 7.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
'சிவஸ்தான்', க.கேசவன்(சட்டத்தரணி),
நல்லூர், Dr.க.சிவனேசன்,
யாழ்ப்பாணம். (மகன்மார்)

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
பொங்கல் விழா

விளக்குவைத்தல்
பங்குனி 6ஆம் நாள் (20.03.2007) செவ்வாய்
முதலாம் பொங்கல்
பங்குனி 13ஆம் நாள் (27.03.2007) செவ்வாய்
இரண்டாம் பொங்கல்
பங்குனி 20ஆம் நாள் (03.04.2007) செவ்வாய்

வழமைபோல் நடைபெறும். ஊரடங்கு நேரத்தை தவிர்த்து பொங்கல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும்படி அடியார்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

(58880)

பரிபாலன சபையினர்.

பின்னுறுதித் தீர்வை
யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

செபமாலை பிரான்சிஸ்
126, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழ.இல.மணநீக்கம்/743

எதிராக
பிரான்சிஸ் பெண் லூத்தம்மா
வளாக வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
எதிராளி

இவ்வழக்கு 2007ஆம் ஆண்டு தை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்களும் பிரசன்னமாயிருக்க வழக்காளியின் சட்டத்தரணி இவ்வழக்கில் 05.12.2006இல் இட்ட கட்டளைக்கமைய எதிராளிக்கான அழைப்புக்கட்டளை தேசிய தினசரிப் பத்திரிகையான உதயனில் 18.12.2006 விளம்பரப்படுத்தப்பட்டு பதில் சேவகம் செய்யப்பட்டதென்றும் அதற்கு அத்தாட்சியாக அப்பத்திரிகையின் பிரதியொன்று மன்றுக்கு சமர்ப்பித்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டவாறு பதில் சேவகம் செய்து திரும்பவேண்டிய இன்றைய திகதியாகிய இன்றைய தினம் எதிராளி சமுகம் இல்லாததால் இவ்வழக்கை ஒருமுக விளக்கத்திற்கு இன்று நிர்ணயித்து வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்று அனுமதிக்க வேண்டுமென்று சமர்ப்பித்ததற்கு மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது, வ1 ஆவணம், வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து மன்று பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெற தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 25.10.2004இல் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை விட்டுப் பிரிந்து சென்று வன்ம உறவறுப்பு செய்த குற்றத்திற்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதெனக் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் தினசரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டு தை மாதம் 23ஆம் திகதி.

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி

வரைந்தது
லிங்கா துரைராஜா
வழக்காளியின் சட்டத்தரணி.

நீதிமன்றின் கட்டளைப்படி ந.சிறிரோகன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

'துளிர்கள் நிறுவனத்தின் உளசமூக கற்கைநெறி'

- சான்றிதழ் பயிற்சிப் பிரிவு - 03
- பயிற்சிக் காலம் - 06 மாதங்கள்
- தகைமைகள் - G.C.E. O/L, சமூக சேவையில் ஈடுபாடு
- விரிவுரைகள் வார நாள்கள் (செவ்வாய், வியாழன்)
- ஆர்வமுடைய இருபாலாரும் 23.03.2007ஆம் திகதி வெள்ளி முற்பகல் 10 மணிக்கு நேர்முகத் தேர்வுக்குச் சமூகம் தரவும்.

இல.47, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்,
துளிர்கள்.

துளிர்கள் நிறுவனத்தின் நிர்வாக சபைக்கான புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் பொதுக்கூட்டம் 15.04.2007 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நிறுவன விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது கலந்துகொள்ளவும்.

தலைவர்,
துளிர்கள் நிறுவனம்.

(58888)

கண்ணீர் அஞ்சலி

சின்னத்துரை கனகரத்தினம்
(ஜே.பி.யு.எம்)
(அரச சட்டத்தரணி - யாழ்ப்பாணம்,
முன்னாள் தலைவர்- வடபிராந்திய
போக்குவரத்துச் சபை)

எமது உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் ஊக்கம் கொடுத்து
உழைப்பின் மேன்மையை உணர்த்திய உத்தமரின்
மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பங்கெடுப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஜி.எஸ். லிங்கநாதன் அன் கோ
உரிமையாளர்களும், ஊழியர்களும்.

(58889)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
பிரான்சிஸ் லெனி ஜெகநேசன்
(நேசன்)

மலர்வு
13.08.1945

உதிர்வு
18.02.2007

18.02.2007 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடி வந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி உபகாரம் செய்து இறுதிக் கிரியைகளிலும் கலந்துகொண்டு எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

166\27, Artha Sadhaka Mawatha,
Dematagoda, T.P.:0773039551

(58874)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

இலங்கையில் மனித உரிமை மீறல்கள்:

ஐ. நாவின் மீதும் குற்றச்சாட்டுகள்

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மோசமாக இடம்பெற்று வருகின்றமை குறித்து - அத்தகைய மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல், விசேட குற்றப் பொறுப்பு விலக்களிப்புப் பாதுகாப்பின் கீழ் அவற்றைத் தொடர்ந்து புரிந்துகொண்டிருக்கின்றமை குறித்து - இவ்விடயத்தைக் கண்காணித்து, கையாண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டிய ஐ. நா. அமைப்பு பொறுப்பின்றி மெத்தனப் போக்குடன் செயற்படுகின்றது.

- இவ்வாறு ஐ. நா. அமைப்பு மீதே சீறிப் பாய்ந்திருக்கின்றது சர்வதேச மன்னிப்புச் சபை.

இந்தக் குற்றச்சாட்டை - விசனத்தை - வெளியிட்டிருப்பவர் மன்னிப்புச் சபையின் கீழ்நிலை அதிகாரியோ அல்லது பேச்சாளரோ அல்லர். லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் இர்னி கான் அம்மையாரே இவ்வாறு கோபித்திருக்கின்றார்.

''விசேட விலக்களிப்பு வசதிகளைப் பயன்படுத்தி மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலோ அதைப் பார்த்துக்கொண்டு நடுக்கத்துடன் செயலற்று இருக்கின்றது''- என்ற சாரப்பட அவர் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நாலாவது கூட்டத்தொடரின் அமர்வுகள் தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகையில், உலகில் மனித உரிமைகளைக் கண்காணிப்பது தொடர் பான - பிரபலமான - ஒரு சர்வதேச அமைப்பு இத்தகைய குற்றச்சாட்டை கவுன்ஸிலின் மீது முன்வைத்திருப்பது முக்கிய விடயமாகும்.

''இலங்கையில் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிப்பு வழங்கும் விசேட வசதிகளைப் பயன்படுத்தி படுகொலைகளும் ஆட்கடத்தல்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸில் செயலற்று அதிர்ந்து போய் இருக்கின்றது. சூடானின் டார்பூர் விவகாரத்திலும் அது (ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸில்) மிகவும் பலவீனமாகவே செயற்படுகின்றது. இஸ்ரேல் மற்றும் அதன் ஆக்கிரமிப்புப் பிரதேச விடயத்திலும் அது உயிரூட்டமாகவோ அல்லது தந் திரோபாயமாகவோ செயற்படவில்லை.'' - என்று கூறும் அவர், இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்டுகின்றார்.

''இந்தப் போக்கினால் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலினதும் மட்டுமல்லாமல் முழு ஐ. நா. கட்டமைப்பினதும் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே கவுன்ஸில் வெறுமனே அரசியல் ரீதியான அணுகுமுறையை நாடுவதை விடுத்து, மனித உரிமை மீறல்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குக் கொண்ட செயற்றிட்டத் தந்திரோபாயத்தைப் பின் பற்ற வேண்டும்.'' - என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

தற்போது ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் இலங்கை அடித்த 'அந்தர் பல்டி'க்கு மத்தியில் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கூட்டத் தொடரில் இலங்கைக்கும் அதன் அரசுக்கும் எதிராக - மனித உரிமை மீறல்கள் விவகாரம் தொடர்பாக - பெரும் குற்றச்சாட்டுகளும், கடும் எதிர்ப்பும் எழும் என்ற பின்னணி நிலவிய நிலையில், அதை சமாளிப்பதற்கு இக்கூட்டத் தொடரில் தாம் ஆற்றிய ஆரம்ப உரையில் இலங்கையின் தலைமைப் பிரதிநிதியாக அதில் கலந்து கொண்ட மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க, சில சமாளிப்பு அறிவிப்புகளை விடுத்திருந்தார்.

''இலங்கையில் மனித உரிமைகள் நிலைமையை நேரில் கண்காணித்துப் பார்வையிட, சித்திரவதைகள் சம்பந்தமான ஐ. நா. செயலாளர் நாயகத்தின் விசேட தொடர்பாளரையும், உள் நாட்டுக்குள் இடம்பெயர்ந்த அகதிகளின் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியையும் இலங்கைக்கு வருமாறு அழைக்கின்றோம்.'' - என்று அவர் அங்கு தெரிவித்தார்.

ஆனால் உள்நாட்டுவிவகாரங்களில் வெளிநாடுகளும், ஐ. நாவும் அதிகளவில் தலையிட அமைச்சர் மஹிந்த சமரசிங்க வழி சமைத்துக் கொடுக்கின்றார் என தென்னிலங்கையில் அவர் மீது கடும் எதிர்ப்புக் கிளம்ப, தமது நிலைப்பாட்டில் தடம் புரள வேண்டியவரானார் அவர்.

''இலங்கையில் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க ஐ. நா. கண்காணிப்பாளர்கள் இங்கு வரவேண்டிய தேவை ஏதும் இல்லை.'' - என்று பின்னர் விளக்கமளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார் அவர்.

இவ்வாறு இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஐ. நாவின் பங்கு பணிகளும் சிக்கலுக்குள் உள்ளாகியிருக்கும் சூழ்நிலையிலேயே ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை விடயம் அலசப்படுகின்றது.

இரு தரப்பினரின் இனப்பிரச்சினைப் போருக்குள் மூழ்கிக் கிடக்கும் இலங்கையில், மனித உரிமை மீறல் தொடர்பான - அதிகளவிலான - குற்றச்சாட்டுகளும், கருத்து நிலைப்பாடும் - சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு எதிராகவே அண்மைக் காலத்தில், முழு அளவில் , முன்வைக்கப்பட்டு, குரல் எழுப்பப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று அன்னைபூபதி நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச், 20

இந்தியப்படைக்கு எதிராக மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின்19ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின.

இதனை ஒட்டிய ஓர் அஞ்சலி வைபவம் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட நூற்றுக்கணக்கான மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

நினைவுச் சுடரினை பேராசிரியர்கள் ஏற்றினர். தொடர்ந்து அன்னையின் திருவுருவப் படத்திற்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

வன்னியிலும் அன்னை பூபதி நினைவு தின வைபவங்கள் நடைபெற்றுள்ளன. (அ-68)

வவுனியாவில் கிரனேட் வீச்சு பெண் உட்பட மூவர் காயம்!

வவுனியா, மார்ச், 20

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாத நபர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் அந்த வீட்டில் குடியிருக்கும் ஒரு பெண் மற்றும் 16 வயதுடைய இளைஞன் ஒருவரும் வேறு ஆண் ஒருவரும் காயமடைந்துள்ளனர். (சி)

மன்னார் – குறிகாட்டுவான் படகுச்சேவை: ஆயரின் விருப்பத்துக்கு ஈ.பி.டி.பி. வரவேற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

மன்னாருக்கும் குறிகாட்டுவானுக்குமிடையில் படகுச் சேவை நடத்துமாறு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றமையை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வரவேற்றிருக்கிறது. ஆயரின் கருத்தை வரவேற்று அந்தக் கட்சி ஆயருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போரின் வடுக்களால் எமது மக்கள் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறார்கள். உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்று எந்தத் தேவைகளையும் சுலபமாக அடைவதில் எமது மக்கள் அவலங்களைச் சந்தித்து நிற்கிறார்கள்.

அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்கு நியாயத் தீர்வு வழங்கும்வரை நாம் காத்திருக்க முடியாது. இதுகுறித்து நாங்கள் எடுத்துவரும் முயற்சிக்கு நீங்கள் விடுத்திருக்கும் இந்த வேண்டுகோள் பலம் சேர்த்திருக்கின்றது. மன்னாருக்கும் - குறிகாட்டுவானுக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து சேவையை நடத்துவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்த விடயமே.

நீங்கள் விடுத்திருக்கும் இந்த வேண்டுகோள், புலிகளின் தலைமையை நோக்கியும் எழுப்பப்பட வேண்டிய ஒன்றாகும் என்பது எமது மனிதாபிமான வேண்டுகோளாகும்.

உங்களைப் போல் இன்னும் இருக்கின்ற மதகுருவானவர்களும், மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு உழைக்கும் சமூக முன்னோடிகளும், சமூக அக்கறையாளர்களும் கருத்துக் கூறவும், வேண்டுகோள் விடுக்கவும் முன்வரவேண்டும். அதற்காகவே எமது மக்களும் நாங்களும் காத்திருக்கின்றோம் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

ICC Cricket World Cup
WEST INDIES 2007
உலகக் கிண்ண 2007 கிரிக்கெட் போட்டி

நெதர்லாந்து, கனடா வெளியேற்றம்

9ஆவது உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் இருந்து மேலும் இரண்டு அணிகள் வெளியேற்றப்பட்டுள்ளன.

கரீபியன் தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணப்போட்டித் தொடரின் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டங்களில் தோல்வியடைந்த நெதர்லாந்து, கனடா அணிகளே தொடரில் இருந்து வெளியேறியுள்ளன.

ஆஸ்திரேலிய அணி அடுத்து சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது. சுப்பர் - 8 சுற்றுக்கு தெரிவாகியுள்ள முதலாவது அணியாக ஆஸ்திரேலியா அணி மாறியுள்ளது.

ஆஸ்திரேலிய - நெதர்லாந்து அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 229 ஓட்டங்களால் வென்றது. இது உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பெறப்பட்ட மூன்றாவது அதிகூடிய ஓட்டங்கள் கொண்ட வெற்றியாகும்.

ஆஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 358 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிறட்கொஜ் ஆகக் கூடுதலான 123 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 27 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. வன் பிரங்கே 33 ஓட்டங்களைப் பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் இங்கிலாந்து கனடா அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து 51 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது. ஜொய்ஸ், கொலிங்வூட் ஆகியோர் முறையே 66, 62 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனடா அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முல்லா 57 ஓட்டங்களைப் பெற்றார்

இந்த ஆட்டங்களில் தோல்வியடைந்ததன் மூலம் நெதர்லாந்து, கனடா ஆகிய அணிகள் தொடரில் இருந்து வெளியேறுகின்றன.

இன்றைய ஆட்டங்கள்:

- ஸ்கொட்லன்ட் எதிர் தென்னாபிரிக்கா
- கென்யா எதிர் நியூசிலாந்து

அமைதி நடவடிக்கைகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சயமுள்ளது. அதன் காரணமாக அது அதிக பங்களிப்பை வழங்க முடியும்.

இதுவரை காலமும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைமையோடு தொடர்புகளை மேற்கொள்ளவே தொடர்ந்து அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டன. ஆனால் புலிகளுக்கு ஆதரவான அதன் கீழ் மட்டத்தை எட்டுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. அந்த மட்டத்திலான முயற்சியை பிரிட்டன் மேற்கொள்ள முடியும். அதன் மூலம் அதிக பங்களிப்பை அதனால் வழங்கக் கூடியதாக விருக்கும். நோர்வேக்கு சமாந்தரமாக பிரிட்டன் தனது பங்களிப்பை வழங்கலாம்.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய யூனியன் போன்றன நோர்வேயின் அனுசரணைப் பணிக்கு ஆதரவு அளிக்கின்றன. எனவே நோர்வேயும் பங்களிக்க இடமுண்டு.

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளை [illegible] யாக நடத்துவதற்கு இடமேயில்லை. இலங்கை இறைமை யுள்ள ஒரு நாடு. புலிகளோ, இலங்கை நாட்டுக்குள் செயற்படும் ஒரு பயங்கரவாதக்குழு. எனவே இரண்டையும் சம தரப்புகளாகக் கணிக்க இடமில்லை.

எந்த ஒரு நாடும் அப்படி இரண்டு தரப்புகளையும் சமமானவையாகக் கையாள முடியாது.

இலங்கையின் அமைதி முயற்சிகளை அவதானித்து வரும் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் (நாடுகள்) சொற்பிரயோகத்திலேயே தவறிழைக்கிறார்கள். புலிகளை 'புரட்சிக்காரர்கள்' என்பதே தவறு.

புலிகளுக்கு எதிரான அரசுப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளில் மக்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று கூறுவது தவறு. பொதுமக்கள் பாதிப்பைத் தவிர்ப்பதி[illegible] அதிக சிரத்தை எடுக்கும் ஒரே நாடு இலங்கை தான்.

கிழக்கின் பெரும்பகுதியை புலிகளிடமிருந்து விடுவித்தாயிற்று. இனி, அங்கு நாங்கள் தேர் [illegible] - என்றார் அவர். (உ)

சைக்கிள் திருட முயன்றவர் கையும் மெய்யுமாக பிடிபட்டார்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளை திருட முற்பட்டவர் பொதுமக்களிடம் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுகட்டிவைக்கப்பட்டார்.

நேற்றுப் பகல் கன்னாதிட்டி வங்கியின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளை திருட முற்பட்டவேளையிலேயே இவர் பிடிபட்டார். (1-86)

சுண்டிக்குளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தது 175 மாணவர்களும் எட்டு ஆசிரியர்களும் பாடசாலையில் தங்கி இருந்தனர். எனினும் அதிர்ஷ்டவசமாக அதிக உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

ஆழியவளை தமிழ்க் கலவன் பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம் ஆகியனவும் சுண்டிக்குளம் வித்தியா லயத்திலேயே செயற்பட்டு வருகின்றன.

நேற்றுக்காலை முதலாவது தாக்குதல் நடைபெற்ற சிறிது நேரத்தின் பின் விமானங்கள் முற்பகல் 11.45 மணியளவில் மீண்டும் இந்தப் பாடசாலைச் சூழலில் குண்டுகளை வீசித் தாக்கியுள்ளன.

பாடசாலை மீது நடத்தப்பட்டிருக்கும் இத்தாக்குதல் தொடர்பாக அரசுத்தரப்பில் இருந்து உடனடியாக கருத்து எதுவும் வெளியாகவில்லை. எனினும் வன்னியில் இனங்காணப்பட்ட விடுதலைப்புலிகளின் கடற் தளங்கள் மீது விமானப்படை நேற்றுத் தாக்குதல் நடத்தியதாக விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்தார். (ஐ)

சூரியாராய்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பதற்காக சிறிபதி சென்றார். அப்போது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

அன்றைய தினம் பிற்பகல் சிறிபதியை கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் வேண்டுகோளுக்கிணங்க அவரை 20ஆம் திகதிவரை - அதாவது இன்று வரை - மேலதிக விசாரணைக்காக தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதோடு இன்றைய தினம் அவரை கடுவெல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டது. அதன்படி இன்று அவர் கடுவல நீதிமன்றத்தில் - ஆஜர் செய்யப்படவுள்ளார். (ஐ-7)

குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

உள வளப் பயிற்சி

சாந்திக உள வளத்துணை நிலையம் நடத்தும் உளசமூகத் தொண்டர்களுக்கான ஆறு மாதகால சான்றிதழ் பயிற்சி நெறி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பாடநெறியில் உள சமூகத் தலையீடுகள், யோகா தளர்வுப் பயிற்சிகள் மற்றும் விசேட உளச் சிகிச்சைகள் என்பன இடம்பெறும்.

யாழ்.போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை மற்றும் ஏனைய உள சமூக நிறுவனங்களுடன் இணைந்து செயல்முறை ரீதியிலான கற்றல் செயற்பாடுகள் இப்பயிற்சிநெறியில் போதிக்கப்படும். (1-79)

கல்வியங்காட்டில் ஆசிரியையின் சங்கிலி அபகரிப்பு

கல்வியங்காடு செங்குந்த இந்துக்கல்லூரி ஆசிரியை ஒருவர் பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை, சைக்கிளில் வந்த திருடர்கள் அவரது கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டனர்.

அதே வேளை -

கல்வியங்காடு, கலைமகள் வீதியில் சைக்கிளில் வந்த பெண்மணியை வழிமறித்த திருட்டுக் கோஷ்டி ஒன்று துப்பாக்கியைக் காட்டி, அப்பெண் அணிந்திருந்த நகைகளை திருட முனைந்துள்ளது. எனினும் அந்தப் பெண்மணி சாதுரியமாக அருகில் உள்ள வீடு ஒன்றுக்குள் ஓடித்தஞ்சம் புகுந்தார். அதனால் திருட்டுக் கோஷ்டி தமது முயற்சியைக் கைவிட்டு ஓடியது. (அ-1-86)

விஞ்ஞானபீட புதிய மாணவர் கல்விச் செயற்பாடு வியாழனன்று

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 2005/2006, 2006/2007 ஆம் கல்வியாண்டுகளில் கற்க அனுமதிக்கப்பட்ட புதிய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என விஞ்ஞான பீடாதிபதியும், பதில் துணைவேந்தருமான இ. குமாரவடிவேல் தெரிவித்துள்ளார். (202)

குருநகர் மாடிவீட்டுப் பகுதியில் நேற்றுப் படையினர் தேடுதல்

குருநகர் ஐந்து மாடி குடியிருப்புப் பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு இக்குடியிருப்பை அண்டியுள்ள இராணுவ முகாமில் இருந்து கடல் பகுதியை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டிருந்தன.

அதையடுத்தே நேற்றுக் காலை தேடுதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-51)

50 ஆயிரம் தேங்காய்கள் கப்பலில் வந்துள்ளன

யாழ்ப்பாணம்வந்துள்ள 'ஜெனி கிளிப்பர்' கப்பலில் ஐம்பதினாயிரம் தேங்காய்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

தனியார் வர்த்தகர்களுக்கான பொருள்களே இந்தக் கப்பலில் முழுமையாக எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரத்து 500 சைக்கிள்கள், 25 ஆயிரம் சைக்கள் ரயர், ரியூப்புகள் 5ஆயிரம் மோட்டார் சைக்கிள் ரயர், ரியூப்புகள் என்பனவும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-8)

நாளை

பங்குனி - 07
புதன்கிழமை
21.03.2007
திதி: திருதியை
பின்னிரவு : 01.56
நட்சத்திரம்: அச்சுவினி
பின்னிரவு : 02.36
சுபநேரம் : 04.47 - 06.17
ராகுகாலம் : 12.17 - 01.47

உள்ளூர் உற்பத்தி சிறக்க வாழ்த்துகின்றோம்

இன்று (20.03.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மதிப்புக்குரிய அரச அதிபர் திரு.கே.கணேஷ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைக்கவிருக்கும்.

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை கரம்பன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தும்புத் தொழிற்சாலையின்

திறப்புவிழாவினை இவ்வேளையில் இலங்கை வங்கியும் வாழ்த்தி நிற்கின்றது.

உள்ளூர் உற்பத்தியினை ஊக்குவிக்கும் இம்முயற்சி தொடர்பில் எமது நன்றியையும் பங்களிப்பையும் வழங்கும் இவ்வேளையில் இம்முயற்சி வெற்றிபெறவும் வாழ்த்துகிறோம்.

முகாமையாளரும்
பணியாளர்களும்
இலங்கை வங்கி - ஊர்காவற்றுறை.

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி.

(சி-50824)

COMPUTER & ENGLISH COURSES

கணனியும் ஆங்கிலமும் சேர்ந்த இலவச 06 மாதப் பயிற்சி இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.கிளையில் நடைபெறவுள்ளது. (பயிற்சி முழுவதுக்கும் பதிவுக் கட்டணமாக ரூபா ஐந்நூறு மட்டுமே (500/=) அறவிடப்படும்.) 25 வயதுக்குக் குறைந்த க.பொ.த சாதாரணம் வரை கல்வி கற்றவர்கள் தங்கள் இ.செ.ச. பிரிவுத் தலைவர்/ செயலாளர் அல்லது ஆளுநர் சபை உறுப்பினர் ஒருவரின் சிபாரிசுடன் தமது விண்ணப்பங்களை தம் சுயவிவரப் படிவத்துடன் 26.03.2007ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். இவ்வகுப்புகள் 03.04.2007இல் கிளையில் ஆரம்பமாகவுள்ளது.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இ.செ.ச. யாழ் கிளை,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-50821).

மரண அறிவித்தல்கள்

திருமதி ஜெகநாதன் ரதிவதனி

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா உபதபாற்கந்தோர் வீதி, சூசைப்பிள்ளையார் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகநாதன் ரதிவதனி (ஆசிரியை- வவுனியா சைவப்பிரகாச மகளிர் வித்தியாசாலை) 18.03.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் ஜெகநாதனின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், உரிமையாளர் சிட்டிசென்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு செல்லையா-பூவதி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா ஆறுமுகம்- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் அஜந்தா (திருகோணமலை கிழக்குப் பல்கலைக் கழகம்), வாகீசன் (மொரட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் சச்சிதானந்தன் (பொறியியலாளர்-சிறிலங்கன் எயார் லைன்ஸ்), தயானந்தா (உதவி அரசாங்க அதிபர்- புதுக்குடியிருப்பு), அருளானந்தன் (உதவி சுங்க அத்தியட்சகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மநாதன், சபாநாதன் (சிற்றிரேட் கோப்ரேசன், வவுனியா), காலஞ்சென்ற செந்தில்நாதன் (சிற்றி ஏஜென்சி), சிறிரங்கநாதன் (கனடா), புவனேஸ் வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2007) செவ்வாய்க்கிழமை வவுனியா தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ.சபாநாதன் (மைத்துனர்).

(சி-50823)

அருள்பாலன் திவ்வியா

மண்டைதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்தவருமான அருள்பாலன் திவ்வியா (17.03.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சோமசுந்தரம் அருள்பாலன்-லதாநந்தினி தம்பதியரின் அன்பு மகளும் விதுஜனின் அன்புச் சகோதரியும் சோமசுந்தரம் - சந்தானலெட்சுமி தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் நாகம்மா (புங்குடுதீவு) தம்பதியரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உக்கிளாங்குளம் வவுனியாவில் நேற்று (19.03.2007) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
கலைமணி வீதி,
கட்டப்பிராய்.

(58925)

தகவல்:
சோ.ஜெயபாலன்.
(பெரியப்பா) மண்டைதீவு.

திருமதி இராஜநாதன் கமலாவதி (பேபி)

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜநாதன் கமலாவதி (பேபி) 15.03.2007 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின்அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - தங்கம்மா(வடலியடைப்பு) தம்பதியரின் அன்பு மருமகளும் இராஜநாதனின்(ஓய்வுபெற்ற பொறியியலாளர்,U.N.V.கொழும்பு, மாநகர சபை) அன்பு மனைவியும் மைலைநாதனின் அன்புத் தாயும் தர்மபூபதி, கதிர்காமநாதன், கோசலாதேவி, கயிலைநாதன், காலஞ்சென்ற கலியுகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகாம்பிகை, மனோரஞ்சிதம், சந்திரசேகரன், புனிதம், செல்வரட்ணம், புஷ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை(21.03.2007) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50,செண்.லோறன்ஸ் வீதி,
கொழும்பு -6, 0112588959, 0777081363

தகவல்:
இ.இராஜநாதன் (கணவர்).

யாழ். பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், தாதியியல், மருந்தியல், சங்கீதம் ஆகிய கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டோர் எதிர்வரும் 29ஆம் திகதியும் -

நடனம், சித்திரமும் வடிவமைப்பும், சட்டம் கற்கை நெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டோர் எதிர்வரும் 30 ஆம் திகதியும்-

கலைக் கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோர் அடுத்தமாதம் 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளிலும் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களின் பெயர்ப்பட்டியலை யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையிலும் www.jfn.ac.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

பிறமாவட்ட மாணவர்கள் மேலதிக விவரங்களையும் மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் www.jfn.ac.lk என்ற இணையத் தளத்தில் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 6714 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் பதிவாளர் கேட்டுள்ளார். (அ-1-202)

வெல்லாவெளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஒரு மோதலில் தாங்கள் அரசுப் படையினர் மூவரைக் கொன்றனர் என்றும், தமது போராளி ஒருவரும் உயிரிழந்தார் எனவும் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை -

கிழக்குக் கடலில் ஆயுதங்களை ஏற்றி வந்த இரு கப்பல்களை கடற்படை தாக்கி மூழ்கடித்திருப்பதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து கேட்டபோது, அது குறித்து 'களத்திலுள்ள தளபதிகளின் அறிக்கைக்காகத் தாம் காத்திருக்கிறார்' என்று இளந்திரையன் தொலைபேசி வழியாக ஏ.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார். (சி)

அல்லைப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் - வழமைபோல் எதிர்வரும் மே மாதத்திற்கு அது ஒத்திவைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் மகேஷ் பெரேரா என்ற உயர் பொலிஸ் அதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு, நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறினால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்படும் என ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி வழக்குத் தவணையின்போது எச்சரித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்காத நிலையில் குறித்த வழக்கை எவ்வாறு நடத்திச் செல்வது என்பது குறித்தும் சந்தேகநபர்களான கடற்படையினரை அடையாள அணிவகுப்பில் நிறுத்துவது பற்றியும் தமக்கு உரிய ஆலோசனை தருமாறு நீதிவான் சட்டமா அதிபர் திணைக்களத்தைக் கேட்டிருந்தார்.

எனினும், சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தொடர்பாக உரிய வழிகாட்டலை வழங்கவில்லை என பாதிப்புற்றோர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், பாதுகாப்புக் காரணங்களுக்காக 50 இற்கும் மேற்பட்ட கடற்படையினரை அடையாள அணிவகுப்பில் ஒரே சமயத்தில் நிறுத்துவது சாத்தியமில்லை என்றும் -

இதனால் குறித்த அணிவகுப்பை அம்பாறை அல்லது திருகோணமலை போன்ற இடங்களில் நடத்தலாம் என்றும்-

கடற்படை உயர் அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தியிருக்கின்றனர் எனவும் அறியமுடிகிறது.

இவ்வாறு இதர இடங்களில் அணிவகுப்புகள் இடம்பெறும் பட்சத்தில் சாட்சிகள் வழக்கில் பங்கேற்கமாட்டார்கள் என சட்டத்தரணிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

PERSONAL CLASSES
364, Stanly Rd., Jaffna
தமிழ்
A/L 2007
துரித மீட்டல் வினா விடை
BY:திரு.தர்மராஜா
ஆரம்பம் 21.03.2007
புதன், வெள்ளி
2.30 - 4 மணி
(ஒரு பிரிவு மட்டும்)
G.A.Q.,B.A., B.A. final
நடைபெறுகின்றன.

விற்பனைக்கு

A4 போட்டோ கொப்பி பேப்பர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 5392

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம்

கொடியேற்றம்:	21.03.2007 புதன்கிழமை	முற்பகல் 10 மணி
மஞ்சம்	26.03.2007 திங்கட்கிழமை	பிற்பகல் 3 மணி
கைலாசவாகனம்	28.03.2007 புதன்கிழமை	பிற்பகல் 3 மணி
குதிரை வாகனம்	29.03.2007 வியாழக்கிழமை	பிற்பகல் 3 மணி
சப்பரம்	30.03.2007 வெள்ளிக்கிழமை	பிற்பகல் 3 மணி
தேர்	31.03.2007 சனிக்கிழமை	காலை 9 மணி
தீர்த்தம்	01.04.2007 ஞாயிற்றுக்கிழமை	காலை 9 மணி
பூங்காவனம்	02.04.2007 திங்கட்கிழமை	பிற்பகல் 3 மணி
வைரவர் பொங்கல்	03.04.2007 செவ்வாய்க்கிழமை	பிற்பகல் 3 மணி

மகோற்சவ குரு: சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக்குருக்கள்
(ஆலயப் பிரதமகுரு)

விளம்பர அனுசரணை:
'பெஷன் ஹவுஸ்'
65, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(58922)

கண்ணீர் அஞ்சலி

Rtn.சின்னத்துரை கனகரத்தினம்
(சிரேஸ்ட சட்டத்தரணி J.P.U.M.)

எங்கள் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய உயர்திரு **க.கேசவன்** அவர்களின் அன்புத் தந்தையின் பிரிவிற்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளையும், ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய சாம்ராஜ்ஜிய தாரணி சிவசாமுண்டி அம்பாளை இறைஞ்சுகின்றோம்.

K.N.சச்சிதானந்தன்
"ரங்கை எம்பதி"
அம்மன் கோவிலடி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

இராகுலசூரியன்ஸ்,
பிரதான வீதி, பருத்தித்துறை. (சி-50820)

இளங்கலைஞர் மன்றம்
இதய அஞ்சலி

எமது மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தவரும்,
நீண்ட காலம் காப்பாளராக எம்மை வழி நடத்தியவரும்
கலை, சமய, சமூகப் பணிகளில் ஆழத்தடம்பதித்தவரும்
மூத்த சட்ட வல்லுநருமாகிய

சி.கனகரத்தினம்(J.P.U.M)

அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சட்ட நாதர் வீதி, நல்லூர். (58921) இளங்கலைஞர் மன்றம்.

90நாள் நினைவஞ்சலி

கடந்த 20.12.2006 அன்று சிவபதமடைந்த எமது கலாசாலை ஆசிரிய மாணவனாகிய சி.சிவானந்தப்பிரகாஷ் அவர்களின் அன்புக்குரிய அண்ணன்

சிவக்கொழுந்து சிவதாஸ் (பாபு)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி ஆசிரியர் கலாசாலை. நீருயிர்வள ஆசிரிய மாணவர் மன்றம். (58923)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் **மு. ஜெயதீஸ்வரன்** அவர்களின் மாமி

திருமதி எதிர்வீரசிங்கம் மகேஸ்வரி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/ வட்டு. மத்திய கல்லூரி.
(58914)

கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனாவைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் செல்வி லோ.எதிர்விரசிங்கம் அவர்களின் அன்புத் தாய்

திருமதி எ.மகேஸ்வரி

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ். போதனா வைத்தியசாலை
தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.
(58915)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

எங்கள் அன்புத் தெய்வம்

திருமதி நடராசா நாகரத்தினம்

பிறப்பு	இறப்பு
13-09-1933	18-02-2007

அவர்கள் காலமான செய்தியறிந்து உடன் வந்து உதவியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளின்போதும் அதன் பின்னரும் வருகைதந்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் வைத்தியசாலையில் உதவிய வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள் - திருமதி சுசீலா இராமநாதன்,
திருமதி ரேவதி பாலசிங்கம்,
Dr.(திருமதி) கௌசலா இராஜரட்ணம்.

பிருந்தாவனம்,
உடுவில். (58924)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.03.2007இல்